# பனிமயம்



செப்டம்பர் 2023

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...

அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

கடந்த மாதம் நடைபெற்ற பனிமயத் தாயின் 16ஆவது பொற்தேர்ப் பெருவிழா நம் நினைவில் நெடுங்காலம் நிற்கும் என்பதில் ஐயமில்லை. அந்த அளவுக்கு 11 நாள் வழிபாடுகளும், பெருவிழா நிறைவு நாள்களும், அவற்றின் சிகரமாகத் தங்கத் தேர்ப் பவனியும் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்திருந்தன என்பதே பங்குகொண்ட இலட்சக்கணக்கான இறைமக்களின் எண்ணம்.

கடந்த ஓர் ஆண்டாக நடைபெற்ற ஆயத்தப் பணிகள் அனைத்தையும் ஆண்டவர் ஆசீர்வதித்தார். குறிப்பாக, 300 நாள் பனிமய மன்றாட்டு, 100 நாள் பரிந்துரை மன்றாட்டு, 30 நாள் நோன்பு வழிபாடு போன்றவை தந்த செப வல்லமையை அனைவரும் உணர்ந்தோம்.

“ஆண்டவரே! உம் வியத்தகு செயல்களால் என்னை மகிழ்வித்தீர்; உம் வலிமைமிகு செயல்களைக் குறித்து நான் மகிழ்ந்து பாடுவேன். ஆண்டவரே! உம் செயல்கள் எத்துணை மேன்மையானவை” (திபா 92:4-5) என்னும் வரிகள் நம் அனுபவமாயிற்று.

நம் உள்ளம் நன்றியால் நிரம்பி வழிகிறது. “நம்முள் வல்லமையோடு செயல்படுபவரும் நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவருமான கடவுளுக்கே திருச்சபையில் கிறிஸ்து இயேசு வழியாக தலைமுறை தலைமுறையாக என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென்” (எபே 3: 20-21) என்று பவுலடியாரோடு இணைந்து நன்றி செலுத்துகிறோம்.

மேலும், பெருவிழா மகிழ்வுக்குப் பங்களித்த மேதகு கர்தினால் பிலிப் நேரி, தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு ஸ்டீபன், ஒவ்வொரு நாள் திருநிகழ்விலும் பங்கேற்ற மேதகு ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவியர், இறைமக்கள், திருப்பயணிகள், நன்கொடையாளர்கள், பணியாளர்கள், தொண்டர்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் நன்றி தெரிவிக்கிறேன்.

உங்கள் அனைவருக்காகவும் கடந்த 12.08.2023 சனி நண்பகல் 12.00 முதல் 03.00 வரை நடைபெற்ற நோன்பு வழிபாட்டில் நன்றி சொல்லி மன்றாடினோம். தொடர்ந்து நன்றி செலுத்துகிறோம்.

தங்கத் தேரில் வெற்றிப் பவனி வந்த நம் அடைக்கலத் தாயான பனிமய அன்னை நமக்காகத் தொடர்ந்து மன்றாடுவாராக!



என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்

உதயம் 24 தாரகை 1

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
41, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### விளிம்புநிலையில் வாழும் மக்களுக்காக...

மனிதாபிமானமற்ற வாழ்க்கைச் சூழலில் வாழும் விளிம்புநிலை மக்கள், நிறுவனங்களால் புறக்கணிக்கப்படாமலும் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகக் கருதப்படாமலும் இருக்க நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

## தங்கத்தேர்ச் சிறப்பிதழ் 4

1. உரோமையின் பெரிய கோவில்......................1
அருள்பணி சுரேஷ்

2. நான் மரி மகன் ..................................6
அருள்பணி. சி. ஜேம்ஸ் பீட்டர்

3. தேவதையைக் கண்டேன் தேநீர் கடையில்..........8
சகோ. மரிய ஆன்றனி பிரகாசி

4. விடுதலை நாயகி நம் அன்னை மரியா.............10
பொன்சேகா

5. அன்னையின்றி இயேசு இல்லை..................12
கலாபன் வாஸ்

6. தங்கத் தேர் கவிதைகள் ............................13

7. தஸ்நேவிஸ் மாதா கூட்டுத் திருமணம்...............14
பரிசுப் பொருள்கள் பட்டியல்

8. தங்கத்தேர் மைல் கற்கள்..........................16

9. பனிமய சாட்சியம் ................................17

10. விவிலியப் போட்டி................................18

11. பனிமயப் பகிர்வு ..................................21

12. மாதம் ஒரு மாதா படம் ..........................25

# உரோமையின் பெரிய கோவில்!



தூத்துக்குடியின் பனிமய அன்னைப் பேராலயம் மக்களால் “பெரிய கோவில்” என்று அழைக்கப்படுவது நாம் அறிந்ததே. ஆனால், நம்மில் பலரும் அறியாதது நமது கோவிலின் தாய்க் கோவிலான உரோமை பனிமய அன்னை பசிலிக்கா பேராலயமும் “பெரிய கோவில்” என்று அழைக்கப்படும் வியப்பான செய்தி. அந்தக் கோவில்தான் மேரி மேஜர் பசிலிக்கா!

உரோமை நகரில் நான்கு மேஜர் பசிலிக்காக்கள் (திருத்தலப் பேராலயங்கள்) உள்ளன. புனித பேதுரு பேராலயம், புனித பவுல் பேராலயம், புனித ஜான் லூத்தரன் பேராலயம் மற்றும் மேரி மேஜர் பேராலயம். இவை நான்கில் மிகவும் புகழ்பெற்றது எது என்று நமக்குத் தெரியும்.

உரோமையில் அன்னை மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட கோவில்கள் பல உள்ளன. சரியாகச் சொல்வதென்றால், மொத்தம் 25 கோவில்கள் இருக்கின்றன. அவை அனைத்திலும் மிகப் பெரியது இந்தக் கோவில்தான். எனவேதான், இது மேரி மேஜர் (பெரிய கோவில்) என அழைக்கப்படுகிறது.

மேரி மேஜர் பசிலிக்காதான் மரியன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட உலகின் அனைத்துக் கோவில்களிலும் மிகவும் பழமையானது. உரோமையிலுள்ள எஸ்கலின் குன்றின்மீது அமைந்திருக்கும் இப்பேராலயம் திருத்தந்தை லைபீரியஸ் (கி.பி. 352-366) அவர்களின் பணிக்காலத்தில் கட்டப்பட்டது.

மிகத் தொன்மையான மரபுப்படி அந்த இடத்தில்தான் ஆகஸ்ட் 5ஆம் நாள் அன்னையின் அற்புத நிகழ்வாக கோடை காலத்தில் பனி பெய்திருந்தது. குழந்தைப் பேறற்ற ஜான் என்பவரும் அவரது மனைவியும்

அன்னையிடம் குழந்தைக்காக மன்றாடினர். தங்களுக்குப் பிள்ளைப் பேறு கிடைத்தால் தங்கள் சொத்துக்களை அன்னைக்கு ஆலயம் கட்ட செலவழிப்பதாக நேர்ந்துகொண்டனர். கோவில் கட்டுவதற்காக அன்னை அற்புதமாக பனி பொழியச் சொன்ன இடத்தில்தான் இந்தப் பேராலயம் கட்டப்பட்டுள்ளதாக மரபு சொல்கிறது.

அப்போதிலிருந்து இந்தத் திருத்தலம் பனிமயமாதா கோவில் என்று அழைக்கப்பட்டது. ஆண்டுதோறும் ஆகஸ்ட் 5ஆம் நாள் பெருவிழாவாகவும் கொண்டாடப்பட்டு வருகின்றது. பனி விழுந்ததின் நினைவாக திருவிழாத் திருப்பலியின்போதும், மாலை ஆராதனையின்போதும் வெள்ளை நிற ரோஜாப்பூக்கள் பீடத்திற்கு மேலேயிருந்து தூவப்படுகின்றன. முன்பு உரோமையில் மட்டும் கொண்டாடப்பட்ட இப்பெருவிழா 1568 ஆம் ஆண்டு திருவழிபாட்டுக் காலண்டரில் இணைக்கப்பட்டு இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது.

மேரி மேஜர் பேராலயத்தில் உள்ள அன்னையின் திருவுருவம் "உரோமை மக்களின் நலம்" என அழைக்கப்படுகிறது. குழந்தை இயேசுவை அணைத்துக்கொண்டிருக்கும் அன்னை மரியாவின் உருவத்தை நற்செய்தியாளரான புனித லூக்காவே வரைந்தார் என்றும் மரபு உள்ளது. இந்த சுரூபத்தின் முன் நின்று எத்தனையோ திருத்தந்தையர் அன்னையின் அருளை நாடியுள்ளனர்.

முன்னொரு காலத்தில் உரோமை நகர் பெருநோயால் பாதிக்கப்பட்டபோது திருத்தந்தை பெரிய கிரகோரியார் (590-604) இந்த சுரூபத்தை உரோமை நகர்த் தெருக்களில் பவனியாகக் கொண்டுவந்து நோயின் தாக்குதலை நிறுத்தினாராம்.

1953ஆம் ஆண்டு முதன் முதலாக "மரியன்னை ஆண்டு" என்று அறிவிக்கப்பட்டது. அந்த ஆண்டில் அன்னையின் சுருபம் உரோமை நகரில் பவனியாகக் கொண்டு வரப்பட்டது.

உரோமை நகர் வருகின்ற திருப்பயணிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தவறாது வருகை தரும் இடமாக இந்தப் பேராலயமும் அமைந்துள்ளது. காரணம், இங்கே கலை நயம் மிக்க சிற்பங்களும், ஓவியங்களும் ஏராளம் உள்ளன. இந்தப் பேராலயத்தில் அமைக்கப் பட்டுள்ள அருங்காட்சியகத்தில் தொன்மை வாய்ந்த கலைப் படைப்புகள் பல வைக்கப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் வியந்து பார்க்கின்றனர் சுற்றுலாப் பயணிகள்.

அது மட்டுமல்ல, இந்தக் கோவிலின் அமைதி மற்றும் புனிதமும் பலரையும் இங்கு ஈர்க்கின்றன. எப்பொழுது சென்றாலும் பக்தி உருக்கத்தோடு அன்னையின் அருள் வேண்டி செபித்துக் கொண்டிருக்கும் இறைமக்களை இங்கு காணலாம். இவர்களின் இறைநம்பிக்கையையும் வியந்தே பார்க்கின்றனர் சுற்றுலாப் பயணிகள்.

சில மாதங்களுக்கு முன்பு உரோமை நகர் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தபோது, இந்த மேரி மேஜர் பேராலயத்தைத் தரிசித்தேன், வியந்து மகிழ்ந்தேன். உரோமையிலுள்ள பெரிய கோவில் மேஜர் பசிலிக்கா என்றால், தூத்துக்குடியிலுள்ள பெரிய கோவில் மைனர் பசிலிக்கா என்று அழைக்கப்படுகிறது. 1582ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்;தக் கோவில் 1982ஆம் ஆண்டு 400 ஆண்டுகளை நிறைவுசெய்தபோது, திருத்தந்தை இரண்டாம் ஜான்பவுல் அவர்களால் மைனர் பசிலிக்கா என்னும் நிலைக்கு உயர்த்தப்பட்டது.

போர்ச்சுக்கீசிய கலை வடிவில் கட்டப்பட்டு, புதுமைகள் புரியும் பனிமய அன்னையின் திருச்சுரூபத்தைக் கொண்டுள்ள இந்த பசிலிக்காவும், உரோமையிலுள்ள பெரிய பசிலிக்காவைப் போலவே, அன்னை மரியாவின் அன்புப் பிள்ளைகளை ஈர்ப்பதில் வியப்பேதுமில்லை!



அருள்பணி. சுரேஷ்




இயேசு, பூமிக்கு வந்ததற்காக பல காரணங்களைச் சொல்லலாம். சுருங்கச் சொல்வதாயின், வானகத் தந்தையை "என் அப்பா" என்று எனக்குக் காண்பிக்கவும், மரியாவை "என் அன்னை" என்று எனக்குத் தருவதற்காகவும் என்பேன்.

மரியா என் அம்மா. நம் மரியா, நம் இயேசுவின் அன்புச் சீடரின் தாய். எனவே, நம் அனைவரின் தாய். இவர் உம் தாய் என்றல்ல, "இவரே" என்று ஏகாரத்தில் சொன்னதன் அர்த்தம் காண்போம்.

இவரே உம் தாய் என்றால், ஏதோ பராமரிப்பிற்காக மட்டும்தான் சொன்னதாகக் கருதிவிடலாம். ஆனால், "இவரே உம் மகன்" என்றும் சொன்னதால், இங்கே புதிய உடன்படிக்கையை நம் இயேசு நிறுவியுள்ளார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

### *சிலுவை அடியில் நின்று கொண்டிருந்தார் :*

பெரும் குற்றம் புரிந்த தன் மகனுக்குத் தண்டனை தரப்பட்டாலே, எந்தத் தாயும் பொறுத்துக் கொள்ள முடியாமல், தண்டனை வழங்கியவர்களைப் பழிப்பாரே; உருண்டு புரண்டு தன் பாரங்களைக் கொட்டுவாரே... ஆனால், பாவமே அறியாத தன் தூய அழகு மகனை (2கொரி 5:21) கண்டோர் கண்மறைத்து அருவருக்கும் அளவுக்கு, முகச் சாயலே இழக்கும் அளவுக்கு கொடூரமாக நொறுக்கப் பட்டவராக (எசா 52:14; 53:2,3), சிலுவையில் தொங்கப் போட்டிருக்கிறார்களே, எப்படித்தான் நமது தாய் மரியாவால் பொறுத்துக் கொள்ள முடிந்தது? மௌனிக்க முடிந்தது? ஆறுமணி நேரமும் நின்றுகொண்டிருக்க முடிந்தது?

இயேசு படப்போகும் துன்பங்களையும், தம் உள்ளம் வாளால் ஊடுருவப்படுவதையும்,

இறைப்பற்று கொண்ட நேர்மையாளர் சிமியோன் முன்னறிவித்ததை, உள்ளத்தில் இருத்தி தியானித்து, எதையும் தாங்கும் இதயமாக தன்னை ஆண்டவருக்குள் திடப்படுத்திக் கொண்டார் என்பதே மறைநூல் உண்மை (லூக் 2:34,35, லூக் 2:19,51).

### *பரிந்துரை தேவை.*

“நம் உதவி இல்லாமல், நம்மைப் படைத்த கடவுள், நம் உதவியில்லாமல், நம்மை மீட்க முடியாது” என்பது மறைநூல் அடிப்படையிலான புனித அகுஸ்தினாரின் பொன்மொழி.

நம் கடவுள் நீதியும் இரக்கமும் உள்ளவர். நீதியின்படி தண்டிக்க வேண்டும். ஆனால், இரக்கத்தின்படி, விடுவிக்கவே துடிக்கிறார். பாவம் புரிந்தால், 3ஆம், 4ஆம் தலைமுறைவரை தண்டிப்பேன் என்றவர், மனம் திரும்பினால், ஆயிரம் தலைமுறைக்கும் ஆசீர்வதிப்பேன் என்றவரல்லவா நம் கடவுள் (விப 20:5ஆ,6). எவ்வளவு இரக்கம் மிகுந்தவர் நம் தந்தை!

சோதோம் கொமோராவை அழிக்கும் முன், ஆபிரகாம் பரிந்து பேச வேண்டும் என்பதற்காகவே, செய்யப்போவதை முன்னறிவிக்கிறார் நம் கடவுள். அழிவு உண்டானது. ஆனால், ஆபிரகாமின் பரிந்துரையின் பொருட்டு லோத்தின் குடும்பம் காப்பாற்றப்பட்டது (தொநூ 18:16-33, 19:29).

கைவிடப்பட்டவராகத் தொங்கும் இயேசுவைப் பார்த்து, அலகை கொக்கரித்தான். கடவுள் தோற்றுவிட்டார் என்பது அவனது தப்புக் கணக்கு. இப்பொழுது, இயேசுவுக்காக ஒருவர் பரிந்து மன்றாட வேண்டும். அவர் தூயவராக இருக்க வேண்டும். அவரே, தூய மரியன்னை.

நின்று கொண்டிருந்தார் என்றால் மகனுக்காக மன்றாடிக் கொண்டிருந்தார் என்று பொருள். ஆகவேதான் உங்க மகனின் மரணவேளையில் அவருக்காக மன்றாடியதுபோல பாவிகளாகிய எங்களுக்காக எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும் என்று வேண்டுகிறோம்.

### *வீரத்தாய்.*

ஒரு காலத்தில், யோவான் வம்புச் சீடர், வன்முறையாளர். இடியின் மகன் எனும் பட்டப்பெயரை இயேசுவிடமிருந்தே பெற்றவர் (லூக் 9:49, மாற் 10:35-37, 3:17). மற்ற சீடர்களின் நிலை என்னவானாலும் பரவாயில்லை. என் பிள்ளைகளுக்கே மேலான பதவிகள் கிடைக்க வேண்டும் என்று சிந்தை கொண்டவர் யோவானின் தாய்.

என்னை ஞானமுடன் வளர்த்த தாயின் பயிற்சி, பாசம், ஆன்மீகம், இவருக்கு வேண்டும் என்பதற்காகவே, “இவரே உம் தாய்” என்று ஒப்படைத்தார். யோவானும் தம் வீட்டில் (இதயத்தில்) ஏற்றுக் கொண்டார். ஆகவேதான், அவரது திருமுகங்கள் எல்லாம் சொல்வது 'அன்பு, அன்பு, அன்பே.'

இவரே உம் தாய் என்று இயேசு வழங்க, மரியன்னையின் மகத்துவங்கள் எத்தனையோ உள்ளன. இந்த ஞானத்தாய்தான், இயேசுவை அன்பு செய்யும் ஒவ்வொரு அன்புச் சீடருக்கும் தேவை என்பது நம் இயேசுவின் சிலுவைப் பாடம்.

ஆகவே, நம் தூய மரியன்னையின் மகத்துவங்களைப் புகழாதோர், ஏற்காதோர், அன்புச் சீடரல்ல, வம்புச் சீடரே!!

வானகத் தந்தையின் மக்களாக, இயேசு கிறிஸ்துவின் சீடராக, தூய ஆவியாரின் தோழராக வாழ்வதானால், மரியாவின் பிள்ளைகள் என்ற பாசம் தானாக வெளிப்படும்.

மரியாவைப் புகழாதவன் மனிதப் பிறவியல்ல (லூக் 1:48), மரியாவைப் பகைப்பவன் பிசாசின் ஆவி கொண்டவன் (தொநூ 3:15). இதுவே மறைநூல் உண்மை.

மாதாவுக்குப் பக்தர் தேவையில்லை. இயேசுவின் அன்புச் சீடராகி, மரியாவின் பிள்ளையாக மாற வேண்டும். “இயேசு உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” (யோவா 2:5) என்பதே மரிதரும் நற்செய்தி நூலாகும்.

*அருள்பணி.*
*சி. ஜேம்ஸ் பீட்டர்*



# தேவதையைக் கண்டார் தேநீர் கடையில்...




ஒரு சிறுவன் தன் பெற்றோரை இழந்த பின் தன் சொந்த ஊரை விட்டு வெளியே சென்றான். வெளி ஊரில் வேலை செய்து வந்தான்.

அவன் தங்கி இருந்த கிராமத்தின் சாலையோரமாக ஒரு நாள் நடந்து சென்றபோது அங்கிருந்த தேநீர் கடையில் இருந்த சிலர் அன்றைய நாளின் செய்தித் தாளையும் அதில் வந்திருந்த ஒரு புகைப்படத்தைப் பற்றியும் மிகவும் உற்சாகத்தோடு விவாதிப்பதைப் பார்த்த சிறுவன் ஆர்வமிகுதியால் கடைமுன் நின்று வி;ட்டான். அவர்கள் என்னதான் பேசியிருப்பார்கள்?

இந்த நிகழ்வு நடந்த ஆண்டு 1955. அந்த செய்தித்தாளில் வந்திருந்த செய்தி என்னவென்றால் தூத்துக்குடியில்; ஆறு மாதங்கள் கழித்து மாதா கோயிலில் தங்கத்தேர் ஓடப்போகிறது.

சிறுவனுக்கு ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியம். தங்கத்திலான தேரா? அது எப்படி இருக்கும், எந்த ஊர் என்று கற்பனை செய்து பார்த்து சோர்ந்துவிட்டான். இரவு உறக்கமில்லாமல் அதைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்த அவன் ஒரு முடிவுக்கு வந்தான். எப்படியாவது அந்த ஊருக்குச்சென்று அந்த தங்கத்தேரைப் பார்க்கவேண்டும்.

எப்படி செல்வது? பயணச்செலவிற்கு பணம் வேண்டும். வேலை செய்து பணம் சேர்த்தான். சில நாட்கள் கழித்து அவன் தங்கியிருந்த வீட்டு உரிமையாளரிடம் தெரிவித்துவிட்டு புறப்பட்டான்.

முதல் இரயில் பயணம் செய்து தூத்துக்குடியை வந்தடைந்து கால்போன

போக்கில் நடந்து சென்று ஒரு கோயிலைப் பார்த்தான். பயணக் களைப்பாலும் பசி மயக்கத்தாலும் அங்கேயே படுத்துறங்கினான். தான் தேடி வந்த இடம் அதுதான் என்று காலையில் கண் விழித்தபோது அறிந்து கொண்டான். தேடி வந்த தேவதை அந்தக் கோயிலில்தான் இருப்பதை அறிந்து மகிழ்ந்தான். தங்கத்தாரகையை தங்கத்தேரில் கண்டான். அளவில்லா ஆனந்தம் அடைந்தான்.

"நான் அன்னியனாக இருந்தேன் என்னை ஏற்றுக் கொண்டீர்கள்" (மத் 25:35) என்ற இறைவார்த்தையின்படி அருகிலிருந்த நல்ல உள்ளங்கள் அவனைத் தங்கள் வீட்டில் ஏற்றுக்கொண்டு மீன்பிடித் தொழில் கற்றுக் கொடுத்ததோடு இறை பக்தியில் வளர்த்து இளைஞனானபின் திருமணமும் செய்து வைத்தார்கள். தற்பொழுது அவர் குடும்பத்துடன் திரேஸ்புரத்தில் வசிக்கிறார். அவர் வயது 85.

இது கற்பனைக் கதையல்ல. இரத்தமும் சதையும் உணர்வுகளும் கொண்ட உண்மை நிகழ்வு. அந்த சிறுவன் வேறு யாருமல்ல. என் ஆருயிர் தகப்பன் திருவாளர் வின்சென்ட் பர்னாந்துதான் அவர்.

நான் யார்? திருச்சி புனித அன்னாள் சபை அருட்சகோதரி. என் அப்பாவின் பாசத்திற்குரிய மூத்த மகள். எங்கள் குடும்பம் அன்னையின் ஆசியுடன் வாழ்கிறது.

முதல் முதலாக தங்கத்தேரில் அன்னையைப் பார்த்தபோது அப்பாவிற்கு ஏற்பட்ட அதே உணர்வுப்பூர்ணமான அனுபவம் இன்றும் எங்கள் குடும்ப அனுபவமாக உள்ளது.

இறைவன் இப்பூவுலகிற்குக் கொடுத்த உன்னதமான விலைமதிப்பில்லாத முத்து அன்னை மரியா. முத்துநகரின் அணிகலன் நம்; பனிமயத்தாய். விவரம் தெரியாத வயதில் அப்பாவிற்கான இறைதிட்டத்தை நிறைவேற்றிய அன்புத்தாய் கன்னிமரியா அற்புதப்பிறவி.

எல்லா நேரத்திலும் எதை செய்தாலும் பனிமயத்தாயை முன்னிறுத்தி செய்யவும் அவர்களிடம் மட்டுமே சரணடையவும் கற்றுக்கொண்டோம். "அம்மா" என உச்சரிக்கும்போது கிடைக்கும் உற்சாகம் விவரிக்கமுடியாத இன்பமாகும். உறவுகள் உதறியபோது தன் அன்புறவில் அணைத்தாள்;.

பிறந்த மண்ணுக்கு வரும்போதெல்லாம் அன்னையின் திருமுகத்தை பார்க்காமல் செல்ல அவள் விடுவதில்லை. காண வரும்போதெல்லாம் தாய்வீட்டு சீதனம் தந்து அனுப்புகின்றாள் எம் தங்கத்தாய். ஒவ்வொருமுறையும் புதுப்புது வரங்களைப் பெறுகிறேன். மகிழ்ச்சி, துடிப்புள்ள விசுவாசம், நம்பிக்கை, அன்பு, அமைதி எல்லாம் ஒருங்கே நிறைவாக கிடைத்திருக்கிறது என் தாய் சபையில். எந்த சூழ்நிலையிலும் எனது அழைத்தலைப் பற்றி ஒரு சிறு துளியேனும் சந்தேகமோ, கலக்கமோ உண்டானதில்லை. காரணம் என் அன்னை பனிமயத்தாய் இருக்க பயமேன்?

அன்னையை தங்கத்தேரில் வைத்து சுமக்கும் நாம் "நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38) என்று கூறித் தம்மை முழுவதும் இறைவனிடம் ஒப்படைத்ததைப் போன்று செய்யவேண்டும். தாய் நம்மிடம் கூறுவது, "அவர் உங்களுக்கு சொல்வதை செய்யுங்கள்" (யோவா 2:5). இறைமகன் இயேசு சொல்வதை நமது வாழ்வில் கடைப்பிடித்தால் நமது விழா அர்த்தம் பெறுகிறது.

இயேசுவைத் தாங்கிய முதல் நற்கருணைப்பேழையை தங்கத்தேரில் சுமக்கும் நாம் சில நேரம் அன்னையை வீதியில் விட்டுவிட்டு தங்கத்தேரை பத்திரமாக எடுத்துச் சென்றுவிடுகிறாம். அன்னையை சுமந்து செல்லும் தங்கத்தேர்களாக நாம் இருக்கவேண்டுமென்பதே அன்னையின் விருப்பமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

அன்னை மரியாளின் அன்மீக ஊற்றை உந்து சக்தியாகக் கொண்டு இன்றைய சமூக வாழ்வைத் தெளிவான, துடிப்பான சவாலாக்குவோம். அப்பொழுது மரியாளின் மாண்புலகில் நாமும் நமது மண்ணும் மகத்துவம் பெறும்..



சகோ. மரிய ஆன்றனி பிரகாசி

# விடுதலை நாயகி நம் அன்னை மரியா



### மீட்புத் திட்டத்தில் விடுதலை நாயகி.

யூதக்குலத்தில் இளம் வயதுடைய கன்னிப் பெண்ணாக வலம் வந்தவள் நமது விடுதலை நாயகியான அன்னை கன்னி மரியா. கடவுளின் தூதரான கபிரியேல் கன்னி மரியாவுக்குத் தோன்றி “அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்முடனே இருக்கிறார். ஏனெனில் நீர் கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுப்பீர், அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர் அவரது ஆட்சிக்கு முடிவே இராது” (லூக். 1:26) என்றார்.

இச்செய்தியைத் தன் செவியில் கேட்டதும் நம் விடுதலை நாயகி கலக்கமடைந்தார். இருந்த போதிலும் கடவுளின் தூதர் கூறிய வார்த்தை கடவுளின் வார்த்தை என எண்ணி மறுத்துரைக்காமல் “நான் ஆண்டவரின் அடிமை, உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்” எனக் கூறி தன்னைத் தாழ்த்தி விடுதலை வாயிலைத் திறந்து வைத்தார்.

நமது விடுதலை நாயகிக்கு நன்கு தெரியும், அவர்களின் குலமரபுப்படி திருமணத்திற்கு முன்பு எந்தவொரு கன்னிப்பெண்ணும் கருத்தாங்கினால் கல்லால் எறிந்து கொல்லப்படுவாள். என்றபோதிலும் நம் தாய் கடவுள்மீதும், அவருடைய வார்த்தையின்மீதும் கொண்ட நம்பிக்கையால் பயமேதும் இல்லாமல் தைரியமாக உலா வந்தார். இதற்குக் காரணம் ஆண்டவரின் அரவணைப்பும், அருளும் இடைவிடாமல் அவரோடு இருந்தது.

### விடுதலை நாயகியின் நெஞ்சக் குமுறல்.

லூக்கா நற்செய்தியாளர் தனது நற்செய்தியில் அழகாக கூறுகின்றார் “உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்”. ஆனால் மீட்பின் அரசரின் பிறப்பிற்கு முன்பு அவர் உலக மக்களுக்கு உயிரைக் கொடுப்பார் எனக்



கூறப்பட்டிருந்தது, தூதரின் வழியாக அன்னையிடம். அதற்கேற்றவாறு தனது 12ஆவது அகவையில் மீட்பரின் அரசர் எருசலேம் கோவிலில் காணாமல் போய், அவரைத்தேடி விடுதலை நாயகியும் அவரது கணவரும் அரசரின் வளர்ப்புத் தகப்பனுமான யோசேப்பும் தேடி அலைகின்றனர். இறுதியில் அவரை போதகரின் நடுவில் காண்கின்றனர். இவற்றையெல்லாம் நம் தாய் தம்முடைய உள்ளத்தில் பதித்து வைத்துள்ளார்.

### *விடுதலை நாயகி நமக்கு கற்றுத் தருவன.*

"எனது மகனை எதுவும் செய்யக் கூடாது" என்று கூறும் பெற்றோர்கள் மத்தியில் நமது தாயான மரியா தன்னுடைய ஒரே மகன் பிறந்ததே உலக மக்களை பாவச்சேற்றிலிருந்து கழுவித் துடைக்கவே என்பதைத் தன்னுடைய மனதில் பதித்துக்கொண்டு விடுதலை உணர்வுடன் மீட்பின் அரசராம் இயேசுவைத் தன் உதிரத்தில் தாங்கினார். ஆனால் மீட்பரை பெற்றவுடனே நான்தான் பெரியவள் என்ற ஆணவம் இல்லாமல் மிகவும் தாழ்ச்சியுடன் விளங்கினார். அவ்வாறே தன் மகனையும் வளர்த்தார். நம்மை வாழ வளர அழைப்பு விடுக்கிறார். எனவே அதனை ஏற்று அதன்படி வாழ்வோம்.

மேலும் மீட்பின் அரசர் திருமுழுக்கு பெறவேண்டியவரான திருமுழுக்கு யோவானை எலிசபெத் தன் முதிர்ந்த வயதில் கருவில் தாங்கிய அச்சமயத்தில் விடுதலை நாயகி அவருடைய வீட்டிற்குச் சென்று பணிவிடை செய்து உதவினார். அப்போது நம் தாயும் மீட்பின் அரசரை ஆறு மாத காலம் சுமந்து கொண்டிருந்தார். இதன் மூலம் நாம் அனைவரும் துன்ப நேரத்திலும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு உதவி செய்து வாழ வேண்டும் என்று நமக்கு விடுதலை அழைப்பு விடுக்கிறாள்.

### *விடுதலையின் உச்ச கட்டத்தில் மரியா.*

முப்பத்து மூன்று வயது இளைஞனான நம் மீட்பின் அரசரை சிலுவைச் சாவுக்குத் தீர்வு இடுகிறார்கள். இதை நம் விடுதலை நாயகி ஏற்கனவே அறிந்ததாக இருந்தாலும் அச்சமயத்தில் அவருடைய மனதில் ஒரு வாள் பாய்ந்ததுபோல் வலி ஏற்பட்டது. ஆனால் தந்தை கடவுளின் மீட்புத் திட்டத்தை நிறைவேற்றத் தன்னால் இயன்ற பணியைச் செய்து முடித்தார்.

### *விடுதலை நாயகியின் வழியில்.*

தாழ்ச்சியை தன் வாழ்க்கையில் உணர்ந்து செயல்பட்டு, அனைத்து நிகழ்வும் தெரிந்தும் அமைதியாய் அதனைச் செயல்படுத்தி, தன் மகன்படும் துன்பம் தெரிந்தும் அதனைக் கண்டும், தன் மனதில் பதியவைத்து தன் ஒரே மகனையே உலக மக்களுக்காகக் கடவுளோடு இணைந்து தானமாக்கினாள். மேலும் இதனால் மீட்பு என்னும் ஒளியை உலகம் முழுவதும் வீசச் செய்து விடுதலை என்னும் சுவாசக் காற்றை நுகரச் செய்து விண்ணகத்திற்கு உடலோடும் ஆன்மாவோடும் சென்றாள்.

நாமும் பாவங்களைக் களைந்து கடவுளின் திட்டத்தை நிறைவேற்றச் செயல்படுவோம்.



**பொன்சேகா**

# அன்னையின்றி இயேசு இல்லை

விண்ணிலிருந்து இறங்கி, மண்ணில் பிறந்த மனுமகனுக்குக் கிடைத்தது வளர்ப்புத் தந்தை மட்டுமே. ஆனால், ஊன் உதிரத்தோடு அவருக்கு ஓர் அன்னை கிடைத்தாள்.

❖ அவர்தாம் இயேசுவுக்கு மனித உயிரளித்தார்.

❖ மழலையரை ஆசீர்வதிப்பதற்குக் கரங்களைக் கொடுத்தவர் அன்னை மரியாதான்.

❖ காணாமறபோன ஆடுகளைத் தேடிச் செல்ல, கால்களைக் கொடுத்தவரும் அந்தத் தாய்தான்.

❖ அன்பிற்குரியவர்கள் இறந்துபோனபோதும், பண்பாடுகள் சிதைவுற்றபோதும், அழுவதற்குக் கண்களைக் கொடுத்தவரும் அந்த மாதாவேதான்.

இந்த அன்னையின் வழியாகத்தான், இறைவனுக்கும் மனுக்குலத்திற்குமிடையே உறவுப் பாலம் அமைக்க முடிந்தது.

இத்தனை மகிமைக்கும் மதிப்பிற்கும் மாண்பிற்குமுரிய மாதாவைப் புறக்கணித்துத் தள்ளிவிட்டால், கடவுள் மனிதனாகப் பிறப்பதற்கான வாய்ப்பே இருந்திருக்காது.

அல்லது –

அந்தத் தாயிடம் பிறக்கும் மகன், ஒரு சாதாரண மனிதப் பிறவியாக இருந்திருக்குமேயல்லாது, இறைமகனாக இருந்திருக்க முடியாது.

அன்னை மரியாள் என்று ஒருவர் இல்லாமல் போயிருக்குமானால், இயேசு மனிதனாகப் பிறந்திருக்கவே முடியாது!

இந்த அன்னையின்றி, இறைமகன் இயேசுவை நாம் அணுக முடியாது. ஏனெனில், இந்த அன்னையிடமிருந்தே அவர் உருவானார். இயேசுவுக்கு உடலும், இரத்தமும் கொடுத்து, மனித உருக்கொடுத்தவர் அன்னை மரியா அல்லவா?

எனினும் – அன்னை மரியாவைக் கடவுளோடு நாம் ஒப்பிடக் கூடாது. ஏனெனில், மரியா படைக்கப்பட்டவர். மனுமகனோ, படைக்கிறவர்.



ஆனாலும், இந்த அன்னை இல்லாமல், விண்ணுக்கும் மண்ணுக்கும் எப்படி உறவுப்பாலம் உருவாக்கப்பட்டிருக்கும் என்பது, நம் சிந்தனைக்குரியது.

அன்னையானவள் தம் ஊனுடலில் இயேசுவை எப்படி உருவாக்கினாரோ, அப்படியே நம் ஆன்மாவிலும் இயேசுவை உருவாக்குகிறார்.

இந்த மாதரசியிடம் மட்டுமே, கன்னித் தன்மையும் தாய்மையும் ஒன்றிணைந்து பரிமளிக்கின்றன. இந்த இரண்டு அணிகலன்களுமே அவனியில் அவசியமானவை என்பதைப் புலப்படுத்துவது இறைவனின் திட்டமாக இருந்திருக்கலாம். மற்றவர்களிடம் காணப்படாத இப்பண்பு, சிறப்பு, அன்னை மரியாவிடம் மட்டுமே ஒளி வீசுகிறது.

அன்னைதான், கன்னித்தன்மைக்குப் பாதுகாவலர்.

கன்னிதான், தாய்மைக்குத் தூண்டுகோலாகவும் இருக்கிறாள்.

தாயின் கரங்களிலே தவழும் குழந்தையைத் தொட்டு மகிழும்போது, அந்த மழலையைப் பெற்றெடுத்த அன்னையை மட்டும் ஒதுக்கிவிட முடியுமா?

இயேசு பாலன், சூரியன் என்றால், அன்னை மரியா, தண்ணிலவு – வெண்மதி!



கலாபன் வாஸ்

தங்கத் தேர் 5 கவிதைகள்

# நம் தாய்



தங்க தேரினிலே எங்க ராணி வராங்க.
பட்டு உடுத்தி பவளம்மா நம்மளை பார்க்க வராங்க!
சீரோடும் சிறப்போடும் அக்களிப்பா வராங்க!
ஊரறிய உலகறிய நமக்கு உதவி செய்ய வராங்க!
சங்கடங்கள் தீர்த்து வைக்க சந்தோஷமாய் வராங்க!
தன்மகனோடு, சிங்கார மேடையிலே நமக்கு ஆசி வழங்க வராங்க!
பசியோடு இருக்கும் மக்களுக்கு பசி போக்க பரமனின் தாய் வராங்க!
கண்ணீரோடு இருக்கும் மக்களின், கண்ணீர் போக்க நம் கர்த்தரின் தாய் வராங்க!
கஷ்டத்தை சொல்லும் போது காது கொடுத்து கேட்க கன்னித்தாய் வராங்க!
சாதி மத பேதம் இல்லாமல் நம் அனைவரையும் சந்திக்க வராங்க!
அன்போடும் அழகோடும் அன்பு செய்யும் அம்மா,
பிரிந்து வாழும் ஒவ்வொரு உறவுகளையும் சேர்த்து வைக்க வராங்க!
நாம் துன்பம் படக்கூடாது என்று நம்மை பார்க்க வராங்க!
மக்களின் நோய் தீர்க்க, தன் மகனை அழைத்துக் கொண்டு சுகம் அளிக்க வராங்க!
100 ஆண்டு புதுமை செய்த எம் குல விளக்கு எம் வீட்டை ஒளியேற்ற வராங்க!
முத்து நகரை முத்தாக ஜொலிக்க எம் பனிமயத்தாய்,
நூற்றாண்டை சிறப்பிக்க தங்கத்தால் அலங்கரித்த தங்க தேரினிலே வராங்க!

*இஞ்ஞாசி ஜெயசீலி*





# தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்

தூத்துக்குடி



## தஸ்நேவிஸ் மாதா கூட்டுத் திருமணம்

**20.08.2023**

### பரிசுப் பொருள்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | தாலி | - | 3 பவுன் |
| 2. | சேலை | - | 1 |
| 3. | பேண்ட், சட்டை, டை | - | 1 |
| 4. | தையல் கூலி, செருப்பு | - | ரூ , 2000 |
| 5. | சாப்பாடு | - | 50 பேருக்கு |

**வழங்கியவர் : திருத்தலப் பேராலயம்**

### சீர்வரிசை

**6. ஸ்டீல் பீரோக்கள் - வழங்கியவர்கள் :**

1) அருள்திரு. ஜோசப் இரத்தினராஜ் (11)
2) திரு. ரெக்ஸ் பர்னான்டோ (7)
3) திரு. இராஜன் அகஸ்டா (3)
4) திரு. ராஜ், முத்து மெடிக்கல் (2)
5) திரு. எட்வின் சாமுவேல் (2)

**7. மரக் கட்;டில்கள் - வழங்கியவர்கள் :**

1) கமல்ஹாசன் ஜீவல்லர்ஸ் (13)
2) திரு. ஜெயகுரு, ஆயக்குடி (12)

**8. ஒரு மெத்தை, 2 தலையணைகள் - வழங்கியவர்கள் :**

1) திரு. சார்லி மிசியர் (11)
2) திரு. ஜெயாசன் (5)
3) மரு. ஜோஸ்லின் (2)
4) திரு. கெபிஸ்டன் விஜி (2)

5) திரு. ஜீடு சகிலா (2)
6) திரு. ஜெஸ்வந்த் ராஜ் (1)
7) திரு. மைக்கேல் லாசர் டொனால்டு (1)
8) திரு. லாய்டு சோரிஸ் (1)

**9. 25 செட் பாத்திரங்கள்**

சில்வர் பானை 1, சில்வர் குடம் 1, சோற்றுப் பானை 1, குழம்பு சட்டி 1, பொறியல் சட்டி 1, பால் சட்டி 1, சில்வர் மூடி 5, கோப்பை 3, எஸ்.எஸ்.செம்பு 1, டம்ளர் 4, சாப்பாட்டு பிளேட் 4, 3 லிட்டர் குக்கர் 1, கரண்டி 5, தூக்குச்சட்டி1 **(மொத்தம் 30 உருப்படிகள்)**

***வழங்கியவர்கள் :***

1) திருக்குடும்ப சபையினர் (5)
2) திரு. லியோனார்டு மொரால் (5)
3) திரு. ஜெஸ்வந்த் ராஜ் (3)
4) திரு. மதன் மகிழ்டா (3)
5) திரு. இளங்கோ மஜெல்லா (2)
6) திருமதி. கிறிஸ்டினா, கதீட்ரல் (1)
7) திரு. கருணாகரன் மெட்டில்டா (1)
8) செல்வன். அஷ்வந்த் கோமஸ் (1)
9) திரு. மைக்கேல் லாசர் டொனால்டு (1)
10) வின்சென்ட் தே பவுல் சபை (1)
11) திருமதி. சோபியா ஃபிலோமின் (1)
12) திரு. விவேக் தர்ஷினி (1)

## இதர பரிசுகள்

10. மின் விசிறி மற்றும் மிக்ஸி (25) – திரு. சேசையா வில்லவராயர்
11. நெற்று முடி, பொக்கே (25) – திருமதி. நேவிசம்மாள் நற்றார் குடும்பத்தினர்
12. பனிமய அன்னை படம் (25) – டாக்டர். அருள்சகோ. ராணி ஆக்னஸ், கோவை
13. திருமண கேக்குகள் (25) – அமலோற்பவ மாதா வாலிபர் சபையினர்
14. 5 லிட்டர் பிரஷர் குக்கர் (25) – திரு. சகாயராஜா பர்னான்டோ, ஸ்நோஸ் காலனி
15. மணமாலைகள் (50) – திரு. ஹெர்மன் ,பனிமய அன்னை பொருள்காட்சி
16. திருவிவிலியம் (25) – திரு. ஜான் போஸ்கோ அமலோரா, கத்தீட்ரல் பங்கு
17. ஜெபமாலை (50) – அருள்பணி. ராஜா ரொட்ரிகோ, இத்தாலி
18. வெற்றியின் கீதங்கள் புத்தகம் (25) – ஷாலோம் அருங்கொடை இயக்கம், சவுதி அரேபியா



# தங்கத் தேர் 2023 மைல் கற்கள் - 5



**45.** ***மரியன்னைத் தியானம்.*** தங்கத் தேர்ப் பெருவிழா ஆயத்த நிகழ்வுகளில் ஒன்றாக 09.07.2023 ஞாயிறு காலை 10.30 முதல் பிற்பகல் 01.30 வரை பேராலயத்தில் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு, “மரியன்னைத் தியானம்” நடைபெற்றது. பங்குத் தந்தையர் குமார்ராஜா, சைமன் ஆல்டஸ் இருவரும் சேர்ந்து 10 தலைப்புகளில் மரியன்னைச் சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்டனர்.

**46.** ***தங்கத் தேர்க் கலைப்போட்டிகள்.*** தங்கத் தேர்ப் பெருவிழா ஆயத்த நிகழ்வுகளில் இன்னொன்றாக 16.07.2023 ஞாயிறு மாலை 03.00 முதல் கலைப்போட்டிகள் நடைபெற்றன. ஜே.எம்.ஜே. அரங்கில் தூத்துக்குடி நகரின் கத்தோலிக்க மாணவர்களுக்கான பாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி ஆகியன நடத்தப்பட்டன. புனித லசால் மேல்நிலைப்பள்ளியில் கட்டுரைப் போட்டி மற்றும் வினா-விடை போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியில் தூத்துக்குடி நகரப் பங்குகளிலிருந்து 200 பேர் கலந்துகொண்டனர். வெற்றி பெற்றவர்களுக்குப் பெருவிழா நாள்களின் இரவு கலைநிகழ்வுகளின்போது பரிசுகள் வழங்கப்பட்டன.

**47.** ***தங்கத் தேருக்கு மகுடம் சூட்டுதல்.*** கொடியேற்ற நாளான 26.07.2023 அன்று பனிமய அன்னைக்குப் பொன் மகுடம் சூட்டிய கோட்டாறு மறைமாவட்ட ஆயர் மேதகு நசரேன் ஆண்டகை, தொடர்ந்து தேர்ப் பிறைக்கு வருகை தந்து, தங்கத் தேரின் பொன் மகுடத்தை ஆசிர்வதிக்க, தண்டல்மார் அதனை உயரே தூக்கி, தேரின் மேற்பகுதியில் அமர்த்தினார்கள். இவ்வாறு, தங்கத் தேர்ப் பணிகள் நிறைவுக்கு வந்தன.

**48.** ***தங்கத் தேர்ப் பவனியின்போது பனிமய அன்னைக்குப் புதிய பொன்னாபரணம்.*** கடந்த 2022 ஜனவரி மாதத்திலிருந்து இறைமக்கள் பனிமயத் தாய்க்குக் காணிக்கையாகத் தந்த தங்க ஆபரணங்கள் எடை போடப்பட்டு 32 பவுன் என்று கணக்கிடப்பட்டன. இவற்றைக் கமலஹாசன் ஜுவெல்லர்ஸ் நிறுவனத்தில் 916 தரத் தங்கமாக மாற்றி, 20 பவுனில் தங்க மாலையும், 8 பவுனில் நெக்லஸ் மற்றும் ஒரு ஜோடி கம்மல்களும் புதிதாகச் செய்யப்பட்டன. இந்த நகைகள் தங்கத் தேரில் பனிமயத் தாயின் திருச்சுருபம் பவனியாக வந்தபோது அணிவிக்கப்பட்டன.

**49.** ***தங்கத் தேர் வீதிகள் ஆய்வு.*** தங்கத் தேர்ப் பவனியின் முன்பாக 03.08.2023 அன்று மாண்புமிகு அமைச்சர் கீதா ஜீவன், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் உயர் அதிகாரிகள் மீண்டும் வருகை தந்து தங்கத் தேரைப் பார்வையிட்டனர். பின்னர் வீதிகளையும் ஆய்வு செய்து, பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து திட்டமிட்டனர்.

**50.** ***தங்கத் தேர்ப் பவனி.*** அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த தங்கத் தேர்ப் பெருவிழா 05.08.2023 சனி அன்று காலை 07.00 மணிக்கு கோவா உயர்மறைமாவட்டப் பேராயர் கர்தினால் பிலிப் நேரி அவர்கள் தலைமையில் தங்கத் தேர்ப் பெருவிழாத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. உடன் மேதகு ஆயர் ஸ்டீபன், மேனாள் ஆயர் இவோன் அம்புரோஸ் ஆண்டகை, கோவை மறைமாவட்ட ஆயர் தாமஸ் அக்குவினாஸ் ஆண்டகை, இலங்கை மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் ஃபெர்னான்டோ ஆண்டகை ஆகியோர் இணைந்து திருப்பலி நிறைவேற்றினர். திருப்பலியின் நிறைவில் மேதகு ஆயர்கள் தாமஸ் அக்குவினாஸ், இம்மானுவேல் ஃபெர்னான்டோ இருவரும் தங்கத் தேரை அர்ச்சிக்க, தங்கத் தேர் "மரியே வாழ்க" முழக்கத்துடன் வெற்றிகரமாகப் பவனி வந்தது.

---

*பனிமய சாட்சியம் : 79*

# பனிமய சாட்சியம்

**லதா, திரேஸ்புரம், தூத்துக்குடி**



என் பெயர் லதா. நான் திரேஸ்புரம், குழந்தை இயேசு பங்கைச் சேர்ந்தவள். எனக்கு நெஞ்சில் ஒரு கட்டி இருந்தது. அது ஆபத்தான கட்டியாக இருக்கக்கூடாது, சாதாரணக் கட்டியாக இருக்கட்டும் என்று மாதாவிடம் வேண்டிக்கொண்டேன். மருத்துவமனைக்குச் சென்று காண்பித்தபொழுது, 10 நாள்களுக்கு மாத்திரை கொடுத்தார்கள். டெஸ்ட் எடுக்க வேண்டும் என்று கூறினார்கள்.

நான் மாதாவிடம் இந்த கட்டி மாத்திரையிலேயே கரைந்துவிட வேண்டும். டெஸ்ட் எதுவும் எடுக்க வேண்டிய நிலை வரக்கூடாது. நான் அதற்கு செலவாக இருக்கின்ற பணத்தை எல்லாம் தங்கத்தேர் பணிக்கு காணிக்கையாகக் கொடுத்து விடுகிறேன் என்று வேண்டிக் கொண்டேன். மறுபடி நான் செல்லும்பொழுது, டெஸ்ட் எடுக்கவில்லை. இது சாதாரண கட்டிதான், மாத்திரையிலேயே கரைந்துவிடும் என்று மாத்திரை மட்டும் தந்தார்கள். மாதாவுக்கு கோடான கோடி நன்றி!! நான் அந்த பணத்தை நன்கொடையாகக் கொடுக்கிறேன். மரியே வாழ்க! இயேசுவுக்கே புகழ்!!

# விவிலியப் போட்டி 104

தயாரித்தவர் :
சகோ. பிரகாசி FBS

## திருப்பாடல் 35 - 40

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. ............................. நீர் இதைக் கண்டும் மௌனமாய் இராதீர்.
2. ............................. தலைவரே இன்னும் எத்தனை நாள் இதைப் பார்த்துக் கொண்டிருப்பீர்.
3. என் ............................. ஆண்டவரை முன்னிட்டு களிகூரும்.
4. என் நா உம் நீதியை எடுத்துரைத்து நாள் முழுதும் ............................. ............................. ............................. .
5. ............................., வாழ்வு தரும் ஊற்று உம்மிடமே உள்ளது.
6. ஆண்டவரே ............................. நீர் எமக்கென செய்துள்ளீர்.
7. ஆண்டவரே எண்ணிறந்தவற்றை நீர் ............................. ............................. .

*குறிப்பு : விடைகளைக் கோர்த்தால் இறைப்புகழ்ச்சி கிடைக்கும்.*

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.09.2023**

## விவிலியப் போட்டி 103

**ஆகஸ்டு 2023** *விடைக்குறிப்புகள்*

### திருப்பாடல் 26 - 33

| | |
|---|---|
| 1. வலிமை, கேடயம் | திபா 28:7 |
| 2. அடைக்கலம் | திபா 27:1 |
| 3. பாதுகாப்பான அரண் | திபா 28:8 |
| 4. கடவுள் | திபா 33:14 |
| 5. புகலிடம் | திபா 32:7 |
| 6. ஒளி | திபா 27:1 |
| 7. துணை | திபா 27:9 |
| 8. கோட்டையும் | திபா 33:20 |

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், **குடும்ப அட்டை எண்** மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :



**94893 19976** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 168**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 94**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

| | | |
|---|---|---|
| 1. | குழந்தை இயேசு | ஆரோக்கியராஜ் ஹெலினா |
| 2. | லூர்து மாதா | சகாயராணி |
| 3. | மணல் மாதா | ஒருவருமில்லை |
| 4. | மிக்கேல் அதிதூதர் | ஜோசபின் பர்னாந்து |

**பாராட்டுக்குரியவர்கள் : 91**

**அந்தோனியார் அன்பியம்**
5. பிருந்தா சார்லஸ்
6. லூக்காஸ் சகாயம்
7. சரோஜா

**அன்னை தெரசா**
8. சுரேஷ் பிரேமா
9. ரெயிசா சுஜய்
10. ஜூலியட் ஜெயரூபி
11. சுகன் மோனிஷா

**அன்னை வேளாங்கன்னி**
12. டென்சி
13. நான்சி

**கிறிஸ்தரசர்**
14. செலஸ்கி கிளமென்ட்
15. ரெக்ஸ் கிரீன்வெல்
16. ஜெகன் பெமினா
17. லூரட் வசந்த்

**திவ்யபாலன் அன்பியம்**
18. சகாயராணி தனராஜ்
19. பிரின்சி

**பாத்திமா மாதா**
20. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
21. ஜெசிந்தா கான்ஸ்டன்
22. ராஜா ரீனா
23. ஆல்வின் அனு
24. ஜெனிட்டா மைக்கேல்

**இரக்கத்தின் மாதா**
25. பாப்டிஸ்டா
26. பிரைட்டன் ஜெரோஃபின்
27. இருதயம்மாள் கொன்சால்

**ஜெபமாலை மாதா**
28. சகாயம்மாள் பெனடிக்ட்

**ஜூடு அன்பியம்**
29. அந்தோனிசாமி
30. ட்ரைபேனா
31. டெரன்சியா அரிஸ்டோ

**காவல்தூதர்**
32. வெனிட்டாள்
33. சாந்தி ஆல்ட்ரின்
34. ட்ரினிஷா
35. எலிஜா இம்மானுவேல்
36. ஜான் ஆல்ட்ரின்
37. சார்லட் பிராங்க்
38. ஜெயா அகஸ்டின்

**குழந்தை தெரசா**
39. கிறிஸ்டி லிஸ்டன்
40. பெனி மொறாயிஸ்
41. பெர்லி பென்சன்

**குழந்தை இயேசு**
42. மோனிகா செபாஸ்டின்
43. அந்தோனியப்பா பிச்சம்மாள்
44. எமல்டா
45. பிரான்சிஸ் வாஸ்

**லூர்து மாதா**
46. ஜெனோ சேவியர்
47. ரம்யா
48. ரோஸ்லின் தாமஸ்
49. சாண்டினா
50. ஆலிவர் வி. ராயன்
51. சகாயராணி
52. ரஜூலா ஜான் போஸ்கோ
53. ஃபிலோ கோமஸ்

**மணல் மாதா**
ஒருவருமில்லை

**மிக்கேல் அதிதூதர்**
54. ஜோசபின் பர்னாந்து
55. வினோ அந்தோனி

**பனிமய அன்பியம்**
56. ஜூடு ரதி
57. மெர்சி கோமஸ்
58. சுரேஷ் ஆனி

**பவுலடியார்**
59. ராஜா ரோஸ்லின்
60. ரஸ்கின் வசந்தா
61. ஜான்சன் ஒஃபிலியா
62. லீமா ரோஸ்
63. ஹெலினா

**பரிபூரணமாதா**
ஒருவருமில்லை

**பொம்பெயி மாதா**
64. மாத்யூ கர்டோசா
65. இம்மாக்குலேட்
66. டிஃபானி அண்டோ
67. அந்தோனியம்மாள் மச்சாடோ
68. லூடா கான்ஸ்டன்
69. ஜான்சி ராணி அமல்ராஜ்
70. தெரசா பிரகாஷ்

**இராயப்பர்**
71. நேவிசம்மாள்
72. ஷைனி

**சவேரியார்**
73. டெலிலா அமலன்
74. அனுஷ்யா பீட்டர்
75. ரூபா மனுவேல்
76. ஜோர்னல் ஜென்சி
77. பிரின்சி ஆக்னஸ்

**செபஸ்தியார்**
78. அந்தோனியம்மாள் டென்சிங்
79. ஜெசிலா சேவியர்
80. அஸ்கேவியஸ்

**சிந்தாத்திரை மாதா**
81. நேசம்
82. ஜூடி ஆரோக்கியராஜ்
83. டிஜேபிஆர் இராயன்
84. ராஜி ஜஸ்டின்

**சிறுமலர் அன்பியம்**
85. செலஸ்டின்
86. விஜி சகாயராஜ்
87. எல்சிட்டா ஆனந்த்

**சூசையப்பர்**
88. கிறிஸ் ரிஜோ
89. மோனிஷா காஸ்பின்
90. ரூபி கொர்னேலியுஸ்
91. ஹேமலதா

**திருச்சிலுவை**
92. சரோலின் கில்டன்

**வியாகுல மாதா**
93. கெலிண்டன்
94. லூர்து லினட்
95. ராஜா ஜரின்

## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 74

### பரிசு பெறுபவர்கள் : 4

| | |
|---|---|
| 96. சென்னை | வின்செந்தி |
| 97. தூத்துக்குடி காந்தி நகர் | ஃபின்டன் சோபியா |
| 98. தூத்துக்குடி லூர்தம்மாள்புரம் | ஆட்லின் |
| 99. தூத்துக்குடி அந்தோனியார் கோவில் | சுஜாதா மகேஷ் |

### பாராட்டுக்குரியவர்கள் : 70

**ஆலந்தலை**
100. சகாயராணி
101. மரியம்மாள்
102. பொன்சேகா
**வீரபாண்டியன்பட்டணம்**
103. ஷாந்தினி
**ஆறுமுகனேரி**
104. தொம்மை அந்தோனி
105. ஜெயராணி
**முக்காணி**
106. மில்டன்
**ஏரல்**
107. ஜாய்ஸ் ரத்தினம்
**புதியம்புத்தூர்**
108. ஹெலன் அன்னமணி
**சென்னை**
109. கமலஜோதி ஜெயசீலன்
110. ஒஃபிலியா தாமஸ்
111. எட்வர்ட் அமலி
**பாளையங்கோட்டை**
112. பிரேமா குணசீலன்
113. சுவர்ணா
114. டெனிசா ஃபர்னான்டோ
115. ரோசி ஜெ.
**பேட்டை**
116. ஹெலனிட்டா
**கயத்தாறு**
117. அமல்ராஜ்
**பெரியகுளம்**
118. குழந்தை தெரஸ்
**திண்டுக்கல்**
119. மரிய மதலேன்
120. ஜெர்மேன்
121. ரொசாலி
**கோயம்புத்தூர்**
122. லூக்காஸ்
**பல்லடம்**
123. பிரான்சிஸ் ஆர்லன்
**திருச்சி**
124. மோனிட்டா கிறிஸ்டி
125. மேத்யூ விவேக்
**மதுரை**
126. சகோ. அப்போலின்
**வடக்குத்து**
127. ஹென்றிதாஸ்
**பரமக்குடி**
128. சைமன் சாந்தி

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இதயங்களின் பேராலயம்**
129. ரமோலா கமிலஸ்
130. ரிமோல்டா
131. ஜேன் கிளைட்டன்
132. ஜூலியட் வாஸ்
133. பெனிட்டா
134. பெலிர்யு
135. சுசீலன்
136. கிரேட்டா ராஜா
**குருஸ்புரம்**
137. ஆசீர்வாதம்
138. பௌவுசி ஜோ மைக்கேல்
139. டெல்ஃபின்
140. பிளசி செல்வராஜன்
141. ஜான்சி மென்டிஸ்
**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
142. சுகிர்தா
143. ஷெரினா
144. சகாயம்
**யூதா ததேயு கோவில்**
145. ரோஸ் சேவியர்
146. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்
**காந்திநகர்**
147. சாந்தினி
148. ரியாலினோ
149. அன்சிட்டா
150. யூஜினியா
151. பேபி வால்டர்
152. ரமேஷ் நர்மதா
**லூர்தம்மாள்புரம்**
153. பிளைசி ஜோசப்
**சார்லஸ் கோவில்**
154. சகாயிற்றா மச்சாது
**அன்னை வேளாங்கன்னி கோவில்**
155. லிஜியா ஃபர்னான்டோ
156. ராகுல் ரூபர்ட்
157. செக்கரியா சாமுவேல்
158. ஜொசி குணபாலன்
159. வினிஃபிரட் பிரின்ஸ்டன்
**இஞ்ஞாசியார்புரம்**
160. அற்புத செல்வி
161. சூசை நவீன்
**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
162. விர்ஜின்
163. தயாபர ராணி
**அந்தோனியார் கோவில்**
164. சோஃபியா விஜய்
165. இருதயம்மாள் கபிரியேல்
**திரேஸ்புரம்**
166. கோல்வின் ஜேசுராஜ்
**பாத்திமா நகர்**
167. ஹேம்லின் விஜய்
**கோவளம்**
168. சரோலின் ஜோசப்
**கனடா**
169. மேரி ஆனி தாமஸ்



**கடந்த மாதம்**
**சரியான விடை எழுதியவர்கள் : 178**
**இந்த மாதம்**
**சரியான விடை எழுதியவர்கள் : 168**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 50)

## செப்டம்பர் - 2023

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | அருள்பணி சைமன் ஆல்ட்டஸ் | 74485 18127 |
| களப் பணியாளர் | : | சகோதரர் ஆல்ட்ரின் | 94893 19976 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் காலை 06.00 - 06.30
சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்
- ✓ உறுதிப்பூசுதல் அருள்சாதனம் :
- ✓ புதுநன்மை அருள்சாதனம் :

உறுதிப்பூசுதல் மற்றும் புதுநன்மை அருள்சாதனம் பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.00 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.

## பனிமயச் சுவடுகள்

### (பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)

486. பனிமய அன்னையின் 441ஆம் ஆண்டுப் பெருவிழாவும், 16ஆவது தங்கத் தேர்ப் பவனியும் 05.08.2023 சனி அன்று இறைவனின் பேரிரக்கத்தால் சீரும், சிறப்புமாகக் கொண்டாடப்பட்டன.

487. தங்கத் தேரில் பவனி வந்த பனிமயத் தாய்க்குப் பெருமை சேர்க்கும் வகையில் 20.08.2023 ஞாயிறு அன்று 25 மண இணையர்களுக்குத் தஸ்நேவிஸ் மாதா கூட்டுத் திருமணம் நடைபெற்றது. மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை அவர்கள் தலைமையில் நடைபெற்றத் திருப்பலியில் 25 அருள்தந்தையர்கள் கலந்துகொண்டனர். தொடர்ந்து, தங்கத் தேர் முன்பாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் 25 மண இணையர்களுக்கும் வரவேற்பும், பரிசுகளும் வழங்கப்பட்டன. (பரிசுகளின் பட்டியலும், நன்கொடையாளர்களின் பெயர்களும் தனியே தரப்பட்டுள்ளன). தொடர்ந்து, ஸ்நோ அரங்கில் மண விருந்து நடைபெற்றது.

488. பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிக்குழுவின் பொதுக்குழுக் கூட்டம் 11.08.2023 அன்று நடைபெற்றது. பெருவிழா மற்றும் தங்கத் தேர்ப் பவனிக்காக சிறப்பாகப் பணியாற்றிய அனைவருக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. தங்கத் தேரைப் பார்வையிட வெளியூர்களிலிருந்து திரளான மக்கள் வருவதால், எதிர்வரும் 10.09.2023 ஞாயிறு வரையில் தங்கத் தேரைக் காட்சிப்படுத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

## பங்கில் நிகழ்ந்தவை



### வரவேற்கிறோம்

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | குழந்தை | பெற்றோர் | திருமுழுக்கு நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 131. | மரிய ஜூவனா | பபியான் - லீனா | 13.08.2023 | மணல் மாதா |
| 132. | டியாரா ஹாரியட் | டினிஸ்டன் - மெரிசா | 13.08.2023 | பாத்திமா மாதா |
| 133. | மரிய ஈனாஸ் | சிமியூஸ் - கிளென்சி ஜெனிபர் | 20.08.2023 | மிக்கேல் அதிதூதர் |
| 134. | லவுரின் இன்ஃபனியா | திவாஸ்கர் - ஸ்டெனிமா | 27.08.2023 | தஸ்நேவிஸ் மாதா |



### வாழ்த்துகின்றோம்

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | புதுநன்மை நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 155. | ரேச்சல் ரொட்ரிகோ | நெவின் - நிமலா | 30.07.2023 | அந்தோணியார் |
| 156. | ரூபல் ரொட்ரிகோ | நெவின் - நிமலா | 30.07.2023 | அந்தோணியார் |
| 157. | பாக்கிய ஆகாஷ் | லாசர் - சண்முக பாக்கியம் | 30.07.2023 | அந்தோணியார் |
| 158. | ஷெராலின் | சகாயராஜ் - சென்சிலா | 30.07.2023 | திவ்ய பாலன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 159. | மேக்னா பெர்னான்டோ | ஆல்வின் - அனு | 30.07.2023 | பாத்திமா மாதா |
| 160. | பேட்ரிக் பெனோ | விக்டர் - டயானா | 30.07.2023 | இரக்கத்தின் மாதா |
| 161. | பவித்ரன் | விக்டர் - டயானா | 30.07.2023 | இரக்கத்தின் மாதா |
| 162. | என்ரிக் பிரையன் வாஸ் | ஜோசப் சேவியர் - ஹெலினா | 30.07.2023 | காவல் தூதர் |
| 163. | எடிசன் | சத்யமூர்த்தி - பூரூலி | 30.07.2023 | குழந்தை தெரசா |
| 164. | ஷரன் ஸ்மித் | டிபாஷிஸ் - ஷர்மிளா | 30.07.2023 | பரிபூரண மாதா |
| 165. | ஜோசப் ராஷ்வின் | ஜெரால்டு - மெட்டில்டா | 30.07.2023 | சிந்;தாத்திரை |
| 166. | அன்டொனி டினோ | தினேஷ் - ஸ்டெபி | 30.07.2023 | பரிபூரண மாதா |
| 167. | டிஷான் | தினேஷ் - ஸ்டெபி | 30.07.2023 | பரிபூரண மாதா |



### ஆசி கூறுகின்றோம்

## 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | திருமணநாள் |
|---|---|---|---|
| 120. | ஜோசப் மைக்கேல் - சிந்தியா | பவுலடியார் | 21.08.2023 |
| 121. | ரெஜோனிஸ்டன் - வெர்ஜி லியோ | பாத்திமா மாதா | 27.08.2023 |



### இறைவனைப் போற்றுகிறோம்

## 4. நோயில்பூசுதல் பெற்றவர்கள்

| எண் | பெயர் | உறவினர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 36. | பிரமிளா | பிரான்சிஸ் | 15.07.2023 | பனிமயம் |
| 37 | மேரி பர்னான்டோ | லாரன்ஸ் | 14.08.2023 | அன்னை வேளாங்கன்னி |
| 38 | பிரபா | பிரியங்கா | 19.08.2023 | பனிமயம் |



### செபிக்கின்றோம்

## 5. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் | இறந்தநாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 163. | பெனிட்டோ | தொம்மை பர்னாந்து | 16.07.2023 | கிறிஸ்தரசர் |
| 164. | செல்வராஜ் | பெபினா | 22.07.2023 | பவுலடியார் |
| 165. | ஜோஸ்பின் ஜெகதா | ஜோசப் டெரன்ஸ் | 24.07.2023 | குழந்தை தெரசா |
| 166. | பிரமிளா | பிரான்சிஸ் | 24.07.2023 | பனிமயம் |
| 167. | செல்வராஜ் மிராந்தா | இலிட்டா மெல் | 01.08.2023 | திருச்சிலுவை |
| 168. | மைண்டோ வி ராயன் | ஷெர்லி | 05.08.2023 | திவ்ய பாலன் |
| 169. | பிரபா பர்னான்டோ | செல்வம் பர்னான்டோ | 29.08.2023 | பனிமயம் |
| 170. | சரோஜா | அந்தோணி பிச்சை | 30.08.2023 | சவேரியார் |

## நடைபெற இருப்பவை

★ 02.09.2023 முதல் சனி மாலை 05.30 மணிக்குத் தங்கத் தேர் முன்பாக மேனாள் அதிபர் பேரருள்திரு. இரத்தினராஜ் அவர்கள் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்படும். தொடர்ந்து, சப்பரப் பவனியும், நவநாள், நற்கருணை ஆசீரும் தங்கத் தேர் முன்பாகவே நடைபெறும்.

★ 08.09.2023 வெள்ளி மரியன்னையின் பிறந்தநாளை முன்னிட்டு மாலை 05.30க்குத் தங்கத் தேர் முன்பாக மறைமாவட்டப் பொருளாளர் பேரருள்திரு. எஸ்.எம்.சகாயம் அவர்களின் தலைமையில் திருப்பலி நடைபெறும். நிறைவில், கேக் வெட்டப்பட்டு, அனைவருக்கும் பரிமாறப்படும்.

★ 09.09.2023 சனி மாலை 05.30 திருப்பலியும் தங்கத் தேர் முன்பாகவே மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை அவர்களின் தலைமையில் நடைபெறும். நிறைவில் “தங்கத் தேர் 2023 மலர்” மேதகு ஆயர் அவர்களால் வெளியிடப்படும்.

★ 10.09.2023 ஞாயிறு மாலை 05.30 திருப்பலியும் தங்கத் தேர் முன்பாக பங்குத் தந்தை குமார்ராஜா அவர்களின் தலைமையில் நடைபெறும். திருப்பலியின் முடிவில் “தேதேயும்” நன்றிப் பாடல் பாடப்பட்டு, தங்கத் தேர்க் காட்சிப்படுத்துதல் நிறைவுக்கு வரும்.

★ திருச்சிலுவை சிற்றாலயத்தில் திருச்சிலுவைப் பெருவிழா 13.09.2023 புதன் மாலையில் மாலை ஆராதனை, 14.09.2023 வியாழன் மாலையில் பெருவிழாத் திருப்பலியுடன் நடைபெறும்.

★ 23.09.2023 சனி அன்று பனிமய நோன்பு வழிபாடு (36) நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை “குடும்பங்களின் ஆசிகளுக்காக” நடைபெறும்.

### திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

★ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.

★ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண் | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 141 | 05.09.2023 | செவ்வாய் | அருள்பணி. மகிழன் | வல்லமை மிக்க இறைவார்த்தை |
| 142 | 12.09.2023 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | வழிகாட்டும் இறைவார்த்தை |
| 143 | 19.09.2023 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின்குமார் | குணமாக்கும் இறைவார்த்தை |
| 144 | 26.09.2023 | செவ்வாய் | அருள்பணி. ஜெரால்ட் ரவி | எச்சரிக்கும் இறைவார்த்தை |
| 145 | 03.10.2023 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | இறைபுகழ்ச்சியின் வலிமை |


மாதம் ஒரு மாதா படம் : 40
ஓவியர் ஜெயராஜ்

# 3rd Year of Remembrance

*"Those who are righteous will be long remembered"*
*(Ps 112:5)*



## N. THOMAS JUDIX FERNANDEZ

Born On Earth
29.12.1952

Born in Heaven
08.09.2020

I cannot say and I will not say
That he is dead, he is just away
With a cheery smile and a wave of hand
He has wandered into an unknown land
And left us dreaming how very fair
Its needs must be, since he lingers there
And you-oh-you, who the wildest yearn
From the old-time step and the glad return
Think of him Faring on, as dear
In the love of there,
as the love of here
Think of him still the same way, I say;
He is not dead,
He is just away.
A Great Soul never dies
It brings us together again and again.

### Deeply Mourned By

| | |
|---|---|
| *Wife* | : **LUCIA SORIS** |
| *Son* | : **J. GORGHY FERNANDEZ** |
| *Daughter in Law* | : **N. MOFISHA FONSEKA** |
| *Grand Daughter* | : **G. MARIAA MICHELLE** |

***along with Family Members & Friends***

Plot no 7/1 F2 Aurelia, No 30 Santhanalakshmi St, Rajeswari Nagar,
Selaiyur Chennai 600073 Ph: 9940470826

*"Jesus replied, I assure you that today you will be with me in paradise"*

*Luke 23:43*

## 2nd Death Anniversary



# C.P.R. REZANTH RODRIGO

**Born : 05.04.1984**
**Heaven : 23.09.2021**

*In Loving memory*

*Wife* : **ELGIN**
*Daughters* : **SHAIRLY RODRIGO**
**HAZEL RODRIGO**

## 1st Death Anniversary



# C. PUSHPA RAJAN RODRIGO

**Born : 03.10.1957**
**Heaven : 29.09.2022**

*In Loving memory*

*Wife* : **CRAMLIN RODRIGO**
*Son* : **SAHAYA REYON RODRIGO**
*Daughter* : **RUBINI RODRIGO**

# விண்ணக வாழ்வின் நினைவு அஞ்சலி!

"நீதியுள்ள ஆண்டவர்தம் திருமுகத்தை நேர்மையாளர்கள் காண்பர்"
(திபா 11:7)



மண்ணில்
08.07.1919
விண்ணில்
22.09.2005

மண்ணில்
15.11.1926
விண்ணில்
30.04.2018

## இ. பி. ராயர் இசபெல் கர்டோசா

*கண் முன்னே நீங்கள் வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் நிழலாடும்
மண்விட்டு மறைந்து நீங்கள்
விண் நோக்கி சென்றாலும் - மனக்
கண் விட்டு மறையாமல்
காலமெல்லாம் இருப்பீர்கள்!*

இறைவா,
என்றும் எம் அன்பு பெற்றோர்
உம் திருநிழலில் பேரின்பம் காண
இறைஞ்சுகின்றோம்.

நீங்கா நினைவில்

மக்கள், மருமக்கள், பேத்திகள், பேரன்கள்,
பூட்டிகள், பூட்டன்கள்

SHINY Ph : 98421 31493